வேலுமயிலுந்துணை.

ஸ்ரீமான்

மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள்,

மாணா மகா-ள-ள-ஸ்ரீ

M. R. S. வேல்ச்சாமிக்கவிராயரவர்கள்

இயற்றிய

தண்டபாணித் தெய்வ ரஞ்சிதமெனும்,

பக்திரசக்கீர்த்தனம்.

முதற்பாகம்.

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்,
பி. நா. சி. ஏஜண்டு,
மு. கிருஷ்ணபிள்ளை அவர்களால்,
மதுரை, ஷம்ஸியா அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

 [அணா 8

1919.

1·19

உ

தத்சத்பரஸ்பரம்.

ஸ்ரீசரவணோற்பவ நமஸ்தே.

தண்டபாணித் தெய்வரஞ்சிதமெனும்,

பக்திரசக்கீர்த்தனம்

முதற்பாகம்.

பழநிக்ஷேத்திரம் முத்தமிழ்ச் சக்ரவர்த்தி,

ஸ்ரீமான்

மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள்

மரபினர்

முருககருணாகர வித்வரத்னம்,

M. R. S.

வேல்ச்சாமிக் கவிராயரவர்கள்

இயற்றப்பெற்றன.

மதுரை புக்ஷாப்,

சென்னை P. N. C. Agent,


M. கிருஷ்ணபிள்ளை அவர்களால்

மதுரை,

ஷம்ஷியா அச்சியந்திரசாலையில்,

அச்சிடப்பெற்றன.

இதன்விலை] 1919 [அணா 8.



மதுரை, டிஸ்டிரிக்ட் கோர்ட் தீர்மானமும் அறிவிப்பும்

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் இந்த பக்திரசக் கீர்த்தனங்களை, பழனி ஸ்ரீமான் மாம்பழக் கவிச் சிங்க நாவலரவர்கள் கனிஷ்டசகோதரர் R. சுப்பிரமணிய ஆச்சாரி அவர்கள்குமாரர், M. R. S. வேல்ச்சாமிக் கவிராய ரவர்கள் இயற்றி, நாங்கள் அதை ஷையாரிடம் சகல சுதந்தி ரத்துடன் கிரயம்பெற்று அச்சிடத் தயாராகயிருந்ததைத் தெரிந்த சிலர் பொறாமையினால் ஷை கீர்த்தனைகளில் உள்ள சில பாட்டுகளை அநேக பிசகுகளுடன் நம்முடைய பாத்திய தையைக் கெடுக்கும்பொருட்டு அச்சிட்டு காபிரைட் செய்து வெளியேத்தினார்கள். அதன் தகவல் தெரிந்தவுடனே மதுரை டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு 1918௵ O. S. No. 1-ல் நாங்கள் வியாஜ்ஜியம் தாக்கல்செய்து விசாரணையின்பேரில் ஷை கீர்த் தனைகள் விஷயமாக சகலபாத்தியமும் யெங்களுக்கு அனுகூ லம் செய்ததுந்தவிரபிரதிவாதிகள் ஷைகீர்த்தனைகளை இனி எப் போதும்அச்சிட்டுவிற்பனைசெய்யக்கூடாதென்றும் 2, 3-பிரதி வாதிகளாகிய மு. ராமையா ஆசாரி, இ. மா. கோபாலகிருஷ் ணக்கோனார் இவர்களிடமிருக்கும் முன் பிசகுகளுடன் அச் சிட்ட தாவா ஷை புஸ்தகங்களை கோர்ட்டில் கொண்டுவந்து ஒப்புவிக்கும் படிக்கும் ஜட்ஜ்மெண்டு ஆய்விட்டபடியால் நாங் கள் இப்போது ஷை பக்திரசக் கீர்த்தனைகளை சுத்தப்படுத்தி 1,2-பாகங்களாக அச்சிட்டு காபிரைட் செய்திருப்பதால் எங்க ளிடம் நேரில் எல்லோரும் வாங்கிக்கொள்ளலாம்.

குறிப்பு:—வேறே யாரேனும் இதிலுள்ள பாடல்களை எதையாவது அச்சிடுவார்களேயானால் நாங்கள்கோரும் நஷ் டங்களுக்கு பாத்தியப்படுவதுடன் கிரிமினல் குற்றத்திற்கும் ஜவாப்தாரியாகும்படி நேரிடுமென்பதை இதன்மூலம் அறி விக்கலாயிற்று.

இப்படிக்கு,

ஷை திர். வாதி ஏஜண்டு, மு கிருஷ்ணபிள்ளை,

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

உடுமலைப்பேட்டை,

கன்னிச்சமீன் சரபம்,

ஸ்ரீலஸ்ரீ முத்துச்சாமிக் கவிராயரவர்களால்

இயற்றிய சாற்றுச்செய்யுள்.

ஆசிரிய விருத்தம்.

வான்கொண்டமுகிலுலவுமலைதோறும்விளையாடும்
வள்ளிதெய்வானைகொழுனன்
மயில்வாகனக்கடவுள்பதமேதுதித்துவெகு
வர்ணமெட்டுகளமைத்து
தேன்கொண்டபாகுகற்கண்டெனக்கொண்டாடுந்
திவ்யசங்கீதாமிர்தச்
சேகரம்பாடியனுதினபஜனைக்கோஷ்டியார்
சித்தமகிழ்சொத்துதவினன்
தான்கொண்டபேரேதகுந்தமாம்பழமாம்
தமிழ்ச்சக்ரவர்த்திமரபின்
சதானந்தவிஸ்வகுலசம்பன்னரெழுத்தாணி
தருசுப்ரமண்யபுத்ரன்
மீன்கொண்டகன்னிவளர்மதுரைவாசன்சத்ய
விஸ்வாசஞானரத்னம்
வித்வமாலைப்ரபலசித்ரசாமர்த்யதன
வெற்றிமணிவேல்ச்சாமியே.

வெண்பா.

வாரந்தொறும்பஜனமாமடஞ்சேர்நண்பர்காள்
சாரந்தமிழ்க்கேதரவேண்டின்—பேரின்ப
மாப்பழவேல்ச்சாமிமதுரமிகுகீர்த்தனங்கள்
நாப்பழகவேண்டுமிந்நாள்.

தத்சத்பரஸ்பரம்.

ஸ்ரீ குமாரதண்டபாணிஸ்மரணே:

வழிபடு கடவுள் வணக்கம்.

காப்பு.

சந்தச்செய்யுள்.

தழைந்தொளி சிறந்தருள் ததும்பிடு மதம்பொழி
　　தவங் கஜமுகந் திருவுளம்
குழந்தைகளறஞ் செய விரும்பெனு கிழண்டவள்
　　குணந்தமிழ் மொழிந்தினி குளம்
கழைந்தவல் பெரும்பயிர் குரும்பைகள் கொழுங்கனி
　　கவர்ந்தெழில் தருங் கடவுளும்
குழைந்தவ யிறன்கதை சொலும்பிர ணவன்புகழ்
　　கொளும்பொருள் பதம்பணி குவாம்.

(1) இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

நாதா கருணைபுரிவாய்—பினியமலர்ப்
பாதா கருணைபுரிவாய்.

அநுபல்லவி.

நான்மறை தனில்முதற்
றுன்வளர் கஜமுக (நாதா)

சரணம்.

தா——தாவருள் வர
தா——துணைவே றுள
தா——வுனக்குப் பெரி
தா——தருணங் கெண (நாதா)

மா——புகழ்பெறு ரா
மா——யணமதில் நே
மா——ஜெயனே மகி
மா——சமயங் கண (நாதா)

கா——குறைய கலக்
கா——கமான தேசி
கா——வல்லபை நாய
கா——ஐங்கர கண (நாதா)

பா——ர்—விழிமாம் பழம்
பா——னியோனே கிரு
பா——கரவேல்ச் சாமி
பா——க்கியசோ தர (நாதா)

தமிழ்ச் சகாயம்.

ஸ்ரீசாரதா வணக்கம்.

வெண்பா.

தவளத்துகிலாளே சங்கிதத் தேனே
துவளமுத் தாரமணி ஜோதியே, பவளக்
கனிவா யுடையவளே கல்விக்கோர்வித்தே
இனிவா யென் னாவி லிரு.

(2) ஆசையாகி வந்தேனே என்ற சிங்கார வர்ணமெட்டு.

இராகம்-பார்ஸி-தாளம்-ரூபகம்.

சாரதா கல் யாணியே
தாளவட மார் பூணியே (சாரதா)
சங்கந்தங்
கெங்கெங்கும்
பொங்கும்பண் வாணியே

சரணாரவிந்தம் பேணியே (சாரதா)
நாரதன் தும்புரு ரிஷி
ஞான சங்கீத மருள்வசி
நண்பன்கண்
டின்பங்கொண்
டுன்பாதமே தெரிசி
நான்முகனேமீட்ட சரசி (சாரதா)
மாக்ஷிமைசேர் மாமணி
மாம்பழக்குல மேனமணி
வம்சங்கந்
தம்சங்தந்
தம்சம்சந் தீக்ஷணி
வாழ்வேல்ச்சாமி கடாக்ஷணி (சாரதா)

சண்முகப்பெருமான் ஸ்துதி.

அடிமடக்கு வெண்பா.

குழையடுத்த கன்னா கோலமயில் மன்னா
உழையெடுத்த பின்னனசேய்-வும்பா-தழைதொடுத்த
நட்பசித்தி வெற்றிபெற்ற-னுக்ரகத்தின்-வேற்சாமி
கட்பருட் பொருட் சட்டானா.

இந்நூல் ஆசிரியர்,

மூதாதையை இறைஞ்சிப் பிரார்த்தித்தல்.

கலித்துறை.

[மல்
கிழக்கவி-முன்றுவி லங்கையைச் சுடுதொண்டின் கீர்த்திசெம்
விழக்கவி-கைகந்தசுண்-ணவர்க்கோது செவ்வேள் வேடுவச்சி
முழக்கவி-ழ்கன்மாப்புஜி தம்பிரான்க்ருபை முத்தமிழ்மாம்
பழக்கவி ச்சிங்கமெங்குல தம்பிரான்பொற்பதங் கெதியே.

ஆசிரியப்பா.

தந்தைகனி பெற்றிடப் புவியெலாம் சுற்றியே
ஷண்முகன் யேங்கி நிற்கத்
தாயுமையவள் பார்த்தென்சேய் கவலேயேன் கனி
தருகிறேன் உன் செவிக்கி
இந்தச்சூதக்கனி இனிப்புரு தென்கழனி
இலங்கெழிற் பழநிமலே மேல்
இனிமே லுதிக்குமென் றம்மைசொல மயிலவண்
யேகியப் பச்சென் றுற
சிந்தைமகிழ் ஜெகசிருஷ்டிகர்த்தர் விஸ்வக்ஞகுல
திலகப்பிறப்பி லோங்கிச்
செப்புதுதி மதுரமொழி வொப்புமகிமைக் குகவேள்
செய்யுங் கடாக்ஷமதனுற்
சந்ததமும் புவிபுகழ்முத் தமிழ்ச்சக்ர வர்த்தியெனுஞ்
சமஸ்தான விருதணிந்தோர்
சங்கமாம் பழக்கவிச் சிங்கத்தை வேற்சாமி
சரணபூஜித நமஸ்தே.

தெய்வப் பிரையத்தனம்,

ஸ்ரீகுமரதண்டபாணி பூஜிதம்.

சந்தப்பா.

பழுத்தருள் பழத்திலே மிருத்திடு நினைப்பிலே
பழப்புவி வலத்திலே வருங்
கழுத்தணி மணத்திலே குறக்குயில் புனத்திலே
கபட்டுரு வெடுத்த கிழவா

யெழுத்தய னுரைப்பிலே இகிற்படு சிறைக்குளே
யிசைத்தர குருக்கள்குக நான்

வழுத்திய திருத்தமிழ் சிறக்கருள் அருட்கடல்
மனத்துறை முருகக் கடவுளே.

(3) விதரண கணபதி என்ற கீர்த்தனவர்ணமெட்டு.

இராகம்-நாட்டை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சரவணபவ திருவருள் தருவாய்—சிந்தைமகிழ்ந்துன்
மரகத மயில்மிசையெதிர்வருவாய்.

அனுபல்லவி.

உரக விஷத்தை உணவாயுண்ட
உயர்தந்தை செவிக்கூட்டி யூட்டி
பிரணவப் பொருள் காட்டிக்காட்டிப்
பெருமை யாயுரை செயுமுருகனே
அருமையார் முராகரி மருகனே
பேரில் நாளுஞ்செந்
தூரில் வாழும் (சரவண)

சரணம்.

குற—வள்ளி மேலிச்சைகொண்டு
கிழ—மாகிப் புனத்திற்றொண்டு
செய்து—தெள்ளித் தினைமாக்கிண்டு
பசுந்—தேன் பிசைந்தூட்ட வுண்டு
க்ஷேமத்துடன் மனமதுபுரி ஜோதிக்கும்—கதிர்
காமத்துறைந் துனதருள் திகழ்நீதிக்கும்—அயன்

சேதிக்கும் பொருளெதுவென
வாதிக்கும் படி நினைவுடன்
ஆதிச்சிறையினிலடை செய்தாய்
வேதிச்சதுர்முகன் துயர்படத்
தேனமிர்தமான நின் சேவடிக்கும்
போற்றித்தினந்தினந்
தானய்வரும் பால் மச்சக்காவடிக்கும்
தென்பரங்கிரியிற்
தேசிகனே யெந்தன்வரம் தந்தனையே சூரர்
நாசமுறச் சங்கரனைச் செங்கதிர் வேல்கோர
தேவனருள் விந்தையயில் கொண்டுமே சம்ஹாரச்
சேனைகளை வென்றனையே யெங்கள்ஜெயவீர

தீர்ப்பாய் கலியே—கடைவிழி
பார்ப்பாய் மெலியேன்—யென்முறை
யேற்பாய் சலியேன்—றுதிசெயக்
காப்பாய் வலியேன் கதியருள்

ஸ்ரீமத்—மாம்பழமணிவேல்ச்
சாமிப்—பாவணி மேலும்
வாமத்—துடன்மறை நாலும்
சாமர்த்—தியசெங் கோலும்

சிரமாறுங் குன்றுக்
கரம்பன்னி ரெண்டுந்
திரமுடன்கொண்டு
பரம்பொருளென்று

சேவலின் கொடி ஆவலாய்ப் பிடி

(சரவண)

மூவரடக்கம்.

இராகம்-பியாகு-தாளம்-திரிபுடை.

(4) சந்தம்.

தனந்தனந்தனந்தனனதன
தனந்தனந்தனந்தனனதன
தனந்தனந்தனந்தனனதன—தந்ததானே.

1. திரஞ்செயம் பொருந்து கணபதி
அறஞ்செயன் றிசைந்த கிழவியு
ஜிதம் பதந் தெரிந்துகைலையில்—முந்துமூலா.
2. சிரங்கெஜங் துலங்கு திருமுடி
முறங்களென் றறைந்த செவிவிழி
செழுங்கிரணஞ் சொரிந்த மதமணி—பொங்குநாதா.
3. உரங்க ரங்கனுஞ் சுரர்கள்பணி
அரன்ரதம் பொடிந்து மசுரனை
ஒடிந்தகொம் பிடந்து பிடியொரு—தந்தவேளே.
4. உடன்படுஞ் சிறந்த தனைபகர்
இடந்தருந் தகுந்ததமிழ் மறை
உளம்புகுந்து கந்து துணைபுரி—தொந்திவாழ்வே.
5. சுரஞ்செயுங் கனிந்த மொழியோடு
நிரந்தரஞ் சரந்தரள உடை
துவண்டவெண் சுகந்த மலரொடு—தந்திவீணை.
6. தொனிந்து கொண்டிருந்து திருவடி
பணிந்திடுங் குழந்தை கவிகளை
சுமங்களந் தருங்கு மரிகலை—சொந்தவாணி.
7. யிறைஞ்சு சங்கரன் குருவெனும
தூரஞ்சொலுங் கடம்ப பிரணவ
யிளங்குறங் கரும்பு குடமிகர்—கொங்கைமோகா.

8. இலங்கை தென்பரங்கிரி கழுகு
தலஞ்ஜலம் செழும்புடை யருணை
யிசைந்து செந்திலம் பழநியயில்—தம்பிரானே.

ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்பராளை வேண்டுகோள்.

நெடில்வர்க சந்தவிருத்தம்.

வட்டோட்டுடன் காளை உற்றோட்டுவன்கூடல் வைகைதனிற்
பிட்டோட்ட மண்வாறி நெட்டோட்டமுன்கோன் பிரம்பினடி
பட்டோட்டம் பின்கரியருட்டோற்றெல்லா வல்லபச்சித்தராய்
யெட்டோட்டெண் ஆடலான் அட்டோத்திரத்தினுமை
[யெழிற்றாள் போற்றி.

(5) லகாரிசல்மியா என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம்-பார்ஸி-தாளம்-யேகம்.

கங்காதரா—சிவா சங்கர்
கங்காளனே—க்ருபா சங்கர்
லிங்காபதா—ரனே சங்கர்
ரெக்ஷாதிரி—நேத்ரனே சங்கர்
அங்காள—யீஸ்பரி
பங்காள—னேஸ்மரி
அய மால்
அடிமுடிகாணேய் கொடி மழுக்கை (அங்)
ஜெயமாய்த்
துடிபிடிபாணேய் படி தொழுக்கை (அங்)
ஆடம்பரா
சி—தம்பரா

அனாதியாதி—யந்தமே
குணாதிதாப்ர—பந்தமே
அத்தா—சித்தா—ருத்ரா—சம்போ
கர்த்தா—பித்தா—பத்ராய்—சம்போ ஓம்
அதில்ரகஸ்ய மாம்பழ நேமி
மதுர பாஸ்யன் வேல்ச்சாமி—துதிக்
கருட் கடாக்ஷனே நமோ
நமோ நமோ நமோ நமோ (கங்காதரா)

சிவஸ்துதி.

ஆஹா யேக்யாஹுஷான் என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு,

(6) இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம் ஆதி.

தேவா—சம்போ சிவா
திங்கள் கொன்றை கங்கை தங்கும் அன்போர்தவா
காவா—சம்போ சிவா
கன்று மறைச் செந்த னற்கையின் கோனேவா
தில்லைத்தாண்டவத்தையாடிச் சென்றுமுப்புராதிகளைப்
பல்லைத்தான்சிரித்தெரித்தீர் பண்டுபுஷ்பவாதிகளை
நல்லபாம்பைச்சுற்றிச்சூடி நன்றுசொர்க்கநீதிதழை
நாதனே கருணாநிதி
வேதனே சுகுணாபதி
நீதனே நிபுணாததி (தேவா)

சாக்ஷாத்—சம்போ சிவா
தங்கிக்கயிலயங்கிரி யமர்ந்தோனேவா
மோக்ஷாத்—சம்போ சிவா
முந்தித்தொந்திக்கந்தன் தந்தையென்போனேவா

மூன்றுதமிழ்ச்சக்ரவர்த்தி நாம்பிறந்தசீலப்பூமி
சான்றுபழநித்தலத்திற் றேம்பொழிந்தஞாலக்ஷேமி
ஞான்றுபுகழைத்தரித்த மாம்பழந்தன்வேலுச்சாமி
நல்லார்சொல்லும் வித்வசிங்கம்
மெல்லாம்வல்ல சித்தசங்கம்
கல்லானைதன் சொக்கலிங்கம் (தேவா)

சிவஸ்துதி.

(7) கண்டேன் மதி என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தேனருள டைந்தேனீதோ
தந்தேன் சரணம் (வந்தே)

அநுபல்லவி.

செந்தமிழுறையுந் தென்மதுரையிலரன்
அந்தமுடனேயாடி யாடுஞ்சேவடித்தொழ (வந்)

சரணம்.

செஞ்சிலம்பாடவே குஞ்சிதபதமொன்றை
ரஞ்சிதமுயல்தாக்கித் தீரமுடனே
மிஞ்சிடுமானந்தங் கொண்டொருக்காலேமுன்
வீசிடவேதூக்கி சிவகாம
வஞ்சியிடதுபுறம் வைத்துமனமகிழ்ந்து
புறலியின்றிசைநோக்கி பதஞ்சொல்லியும்
அஞ்சிடுவியாக்ரபாதகமகிழ்வாக்கி
குஞ்சரி சங்கட்டமெனநடியிணைதொழ (வந்)

பாணையஷ்ட திக்கிலுந் தானேநடுநடுங்க
அவனியிற்புகழ்நாட்டி சங்கீதசுரக்
ஞானசுதிநாரதர் தும்புரர்வீணையை
நலமுடனேமீட்டி கீர்த்தனம்பாட
வானவர்புகழ்நந்தி மத்தளம்வாசிக்க
மாலயன்கரங்கட்டித் தாளம்போட
த்யானமெழிலடியார் செய்பஜனைக்கோஷ்டி
தானரன்கூத்தாடுந் தாளிணைதரிசிக்க (வந்)

தில்லைமூவாயிரோர் சிவசிவசிவவென
திருமுனிமுறைகூற பூமழைவிழ
வல்லபஜதிதக் ஜுனத்தரிகிடவென
வரிசைமேளவுதாரத் தத்திமியெனச்
சொல்லப்பெருமைகிடத் ததிங்கிணத்தோமென
ஜொலிக்கும்பாதமீற கீர்த்திமாய்பழம்
நல்லவர்சந்ததி நறுந்தமிழ்சேர
எல்லைமுன்வேல்ச்சாமி இயற்றும்துதிபடித்து (வந்)

(8) இந்தநந்தவனம் என்ற சிங்கார வர்ணமெட்டு.

இராகம்-ப்யாகு-தாளம்-ரூபகம்.

பொன்னம்பலத்தினிற் பன்னகம்புலியால்
முன்னமே தாண்டவந் தன்னைப்புரிந்திட்ட
அண்ணலே வந்தருள்வாய் அடியேனுன்
சொன்ன வரந்தருவாய் விடைமீதென்
முன்னே யேறிவருவாய் நறும்
பூம்பொற்றடி—சேவித்திட
ஞாபித்துநின்—கோவிற்புகி (பொ)

யெத்தனை நாளுன்னை நத்திப்பணிந்தாலுஞ்
சித்தி தராமலே தத்தித்தோமென்றாடிக்
கத்தி யலறவிட்டாய் அதாற்பிரம்
புத்தடிப் பூசைபட்டாய் பின்பிவ்வூரைச்
சுற்றி விறகைவிற்றாய் நான்
யேழைத்துதி—யாளத்தகி
வேளைப்ரிதி—தாளைக்கதி (பொ)

தொண்டராகரா வென்றுதியாணிக்க
மன்றுள்ளோரானந்தங் கொண்டுமுந்தாணிக்கக்
கண்டேன் மத்தாளம்போட நந்தியுன்மா
லண்டை கைத்தாளங்கூடத் தும்பூரும்
பண்டே நாரதர்பாட கிட
தொங்தோமருள்—தந்தோமென
வந்தோமனச்—சந்தோஷமாய்ப் (பொ)

அத்தனே வந்தருள் முத்தமிழ்வேந்தர்பார்
வித்தக மாம்பழம் சுத்தன்குலத்திலு
தித்—த வேல்க்சாமிதந்தை யானமெந்தன்
கர்த்தனே வாழ்வுசந்தை பிறப்பிறப்
பத்தனை நீக்கிவிந்தைக் கூத்
தாடும்கலி—யோடுந்தினம்
நாடுந்துதி—பாடும்புகழ் (பொ)

(9) மடமானேயினிநானே என்ற ஜாவளி வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நடராஜா ஜெக தீசா
நம்பினேன் சிற் றம்பலம்வாழ் (நட)

(அநுபல்லவி.)

ஜனனமாயாரவம்—புலியும்பணியும் (நட)

(சரணம்.)

வாசவருரைமன்றுள்—வந்துமுன் மகிழ்கொண்டு
பூசைசெய்யன்பர் தொண்டு—போற்றுமகிமைகண்டு

புரியுந்தாளமய
னரியும்போட வீணை
பரியின்முக நாரதர்
துரிதமீட்டி ராகம்

பாட— மூவாயிரம்பேர்
கூட— நந்திமத்தாளம்
போட— நாவலர்கள் கொண்
டாட— நலங்கூத்தாட

பார்நடுங்கிட—சீர்துடங்கிட—பேர்முழங்கிடவே

பங்கமேயில்லா முத்தமிழ்ச்
சிங்கமாம்பழக் குலத்திற்
பொங்கமாமணி வேல்ச்சாமிக்
கங்கமாய்த் தந்தையே (நட)

(10) கந்தப்பா வந்து என்ற கீர்த்தன வர்னமெட்டு.

இராகம்-இங்கிலீஷ்நோட்-தாளம்-ஆதி.

தந்தைதாய் வுந்தன் பதமலர்
தனையென நினைவுடன் தினந்தொழுதேன் (தந்தை)

பங்கவினையகற்றும்-பவநாசா
பதஞ்சொலிவியாக்ரமர் பணிநேசா

புரத-வரத-சிதம்-பர-வாசா
பநி நிதி மதி தரி நடராஜா

பண்டிண்மன் றின்றெண்டன்
பன்றன்முன் கொண்டிசைநடமிடு (தந்தை)

தும்புருநாரதர் துதிபாட
சுரர்முனிவோர்களும் சபைகூட
துரிதமுடனந்திமத் தளம்போட
துணையடியவர்கலி பறந்தோடத்

துங்கந்-தங்-கங்கம்-பொங்
கெங்குந்தங் கம்பலநடமிடு (தந்தை)

சக்கிடதோமென ஜதிநேர
சற்சனர்பஜனைக் கச்சேரிசேரத்
தமிழ்மொழிமாம்பழக் குலவீரத்
தனமுறைவேல்ச்சாமிக் கருள்சாரத்

தந்தஞ்—சிந்—தைதந்தன்று—ன்
பந்தந்தொாங் தோமெனநடமிடு (தந்தை)

ஸ்ரீமீனாம்பிகை தோத்திரம்.

(11) மாத்தாட பாரதேனோ என்ற ஜாவளி வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

(பல்லவி.)

பூத்தாளின் மாமணியே
பொன்மீனம்மணி (பூத்)

(அநுபல்லவி.)

கூத்தாடுவேன்பாரி கோமான்குலக்குமாரி
தூர்த்தார்சூரசம்ஹாரி--துவாதசாந்தகெம்பீரி (பூத்)

சரணம்

உறவி வுளம்பொருந்தே—வோங்குந் தவக்கொழுந்தே
பிறவிப்பிணிமருந்தே—பேரின்பத்தேன்விருந்தே

பிளைக்கும் வழியருள்
மழைக்குமிழிரச
முளைச்செங்கரும்பே நான்
தழைக்குங் கிருபைசெய் (பூத்)

உனையன்றிஜெகமீது——வோரனுவசையாது
இனையேனும்வினையேது—தேவியாவுமுன்சூது

தெரிசனமுதவு
மருஜெனனமதை

யரிசமரசப
வுரிஷமேறினது

தீக்ஷண்ய மிருக
டாக்ஷக் கருணைபஞ்
சாக்ஷரமுமாருத்
ராக்ஷ---பூஷணி

செழிஞ்சுடரொளியான்
தொழுஞ்சுகிர்தமேகேள்
சழிஞ்சில்லறகெவி
விழுஞ்சுவறெனவே

தெம்பை—றெம்புமு
டம்பை—நம்பியி
டும்பை—யுங்கொள்கு
டும்ப—நொம்பலம்

தேச பாசமுந்-தெளிதற்கெழிதில்லாது
மோச வாசக-மொழிதற்கிழிவெனப்ர

காச தேஜசுன்—கழலிற்செழி துணையாய்ப்
பேச நேசரைப்—பிழிசர்க்கரை மதுரம்

பெருகு—ந்துதிசொலி
ஒருகு—ம்பிடாவது
உருகு—ந்தபோதனர்
பருகு—ம்ரமணியே.

சிங் கம்பண் டெங் குஞ் சங்
கம் பொங் கும் மாம்பழம்
க்ஷேமியின் சொந்தன் வேல்ச்
சாமியின் சிந்தையிலே
தங் குந் தன் றுங் கந்து
லங் கு மே காம்பரி

தரிதிரி புரையே
சுருதிமுதல்வியே

குங் குமந்தண் சந் தங்க
தம் பங் கொள் சாம்பவி

கோங்கர் தொண்டர் தயப்
பாங்கர் துணைவிய

லங் க்ர்தங்கொஞ் சுஞ்சிலம்
புங் கிண்கிணி பாம்பணி

ஸ்ரீணி நித்யகல்
யாணி முத்தியின்
வேணி சத்திய
ராணி உத்தமி (பூத்)

(12) அலைசேர் கடல்சூழ் யென்றசிங்கார வர்னமெட்டு.

இராகம் ப்யாகு தாளம் ஆதி.

(பல்லவி.)

கருணாகரியே கிருபைக்
கடலான பரம்பொருளே.

காரிருள் மொய்த்ததில் சூரியனுதித்திடுங் காரணமருளே (க)

(அநுபல்லவி.)

திருநாள் வருமாமணியே---உனதொரு
திருவுளரகசிய மதையறியேன்

திடமொடுதட—படவிடமடை
சடைமுடியடர்—கடவுளர்நடி (கருணா)

(சரணம்.)

சிட சட வென கொடு--மகுடனை
உட லூறு குடல்—பிடுங்--கிடவுடன்

செஞ்சர—ணத்திலே
தஞ்சமெய்--பக்தர்சு
பஞ்சொல வைத்தவளே

மடமயிலுன தெழிலதிசய
மளவிடமுடிவில்லை உமையே--பூ

மாரியைத்—தெளிந்தேன் சித்தங்
காரிய ஜெயத்தளித்துக்
கோரி முத்தமிழ்த்தடத்தில்
ஊரி பொற்பதத்தின் முத்தி (கருணை)

அகமுறு தாடகை வாலிமராபுனல் ராவணன்
அழிகண்டரி சோதரியே
ஆதிமுதற்கும ணதிதுணைச்ஜெக
ஜோதிமயக் குறியே—அழகிய

அத்திமு கத்தர்கு றத்திச மர்த்தனைப்
பெற்றத வக்கனியே
பகலிரவு முனதுதோத்திரப்
புகழ்மொழி பவனெனையா தரியே

பாம்பணிபொன் வாழ்நிஷ்காமி
பூம்பருகுந் தாள்நட்பாமின்
மாம்பழம்தன் பால்சற்க்ஷேமி
தாம்பணிசொல் வேல்ச்சாமி (கருணை)

(13) மாதுபாகமானவா என்ற கீர்த்தன வர்னமெட்டு.

இராகம் இங்கிலீஷ்டோன் தாளம் ஆதி.

மீனலோச்சனிதரி--மேழிதாள்வந்தனம்
மேலவர்துதிசெய்யும் மேதினிகுணகரி

வேதா பக்ஷணி லக்ஷணி வீரதெக்ஷணி

விமலநிதா—ணமவனிதா
கமலிசதா—சமரசதாய்
வேணி ராஜேஸ்பரி
பேணினேனேஸ்மரி விண்கெதி பெண்பதி (மீன)

தேமதுரை நாரணி—செம்பொன்னின்தாரணி
க்ஷேமிமாம்பழத்தின் வேல்ச்சாமியன்னையாரணி
சீலதீக்ஷணி மோக்ஷணி சிங்காசனி

திருவருள்வாய்—குருமணியாய்
உருபொருளாய் தருபணியாய்

தேவி சங்கரி
செங்கரங்கங்கணி—ஸ்ரீதரி—ஆதரி (மீன)

முருகப்புராணி.

மீனாக்ஷி விண்ணப்பம்.

(14) நன்னபியாராரே என்ற இந்துஸ்தான் வர்னமெட்டு.

இராகம் தேசிக தோடி அடை தாளம்.

அம்பிகா—உன்—மகன்—குகன்
தம்பிரான்—கன்ய—சண்—முகன்

நம்பினோ—ரை மறந்தான்
நாரிமைய—லேசிறந்தான்
வம்பிலே—யேன்பிறந்தான்

வாது—சூது—யேதென்—றோதுவாய் (அம்)

பூஜைவர—மேபுகட்டான்
போதனையைக்—கேள்விப்பட்டான்
வேசைமகன்—சொல்தெவுட்டான்

விம்பன்—வம்பன்—கம்பன்—நம்பிய (அம்)

ரெண்டுபெண்—டாட்டிக்காரன்
நீலமயில்—பேல்தர்ப்பாரன்
தொண்டுகொண்—டாட்டத்தீரன்

சோம்பல்—வீம்பெல் லாம்பொல் லாங்கம்மா (அம்)

முங்கிக்கிரி கோவில்சுற்றி
மொட்டையிட்டுக் காதுகுத்தி
அங்கிரிக் காவிதத்தில்

ஆண்டி யாயா வாண்டி பாண்டி—ஸ்ரீ (அம்)

முத்தமிழ் முகாந்த்ரநாமி
முகில்மாம்ப மேந்த்ரநேமி
வித்தகசெல் வன்வேல்ச்சாமி

விதார ணதரன் மதுரை—ராணி—ஸ்ரீ (னம்)

விஷ்ணு தோத்திரம்.

(15) ஷாதுமான் என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம் பார்ஸீ தாளம் யேகம்.

பல்லவி.

நாரணா—ஞான்றுமாங்கல்ய தாரணா ஸ்ரீ (நா)

அநுபல்லவி.

நாணிபா—ணக் கோதண்ட பாணிசம்பூரணா
ஞான்று மாங்கல்யதாரணா (ஸ்ரீநா)

சரணம்.

தோரணையாய்க்ஷீராப்தி தோன்றண்டர்க்
கொத்தாசைச்—சுகுணா—சுகுணா—சுகுணா—சுகுணா

துணைக் கோசிகனால்
மணக் கோலச்சீதை
பிணக்கோர் லங்கேசன்
கணைக்கோள் வென்றஸ்ரீ (நார)

வால்மீகி மாருதி துர்வாசர் சௌரி
விபீஷணர் கபீர் குச்சேலர் வேழமுந்
துதிக்கும் லட்சுமிக்கு மணாளா மணாளா மணாளா மணாளா

சேல்மீன்கண்பெற்ற சிற்றிடைச்சியார்

சகஸ்திரம் பத்தென்றமாதர்
சிநேகா-சிநேகா-சிநேகா-சிநேகா

பால்வெண்ணையுண்டு பாரதத்தை முன்முடித்த
பவித்ரா பவித்ரா பவித்ரா பவித்ரா

பக்தரின்ஞானச்ச
முத்திரமேகமே
மெய்த்தவ மாரிவர்ச்
சித்தென்னையாளும் ஸ்ரீ (நார)

பாமிக்க மதுரமாம்பழம் பண்சிங்கக் குலமணிவேல்ச்
சாமிக்குமினிய தேம்பொழி
தண்சங்கங்கரமணி ஸ்ரீ (நா)

ஸ்ரீ ரெங்கநாதர் தோத்திரம்.

(16) என்ன கேள்விமுறை என்றகீர்த்தனை வர்னமெட்டு.

இராகம் பிலஹரி தாளம் ரூபகம்.

பல்லவி.

ரெங்க நாயகமே

நித்திரைதெளிந்—திடும்விடிந் தது—ஜெகமே—ஸ்ரீ (ரெங்)

அநுபல்லவி.

துங்கா—மாகொள்ள
டங்கா—வேரிவெள்
ளங்கான்—வருமுனே ஸ்ரீ (ரெங்)

சரணம்.

சங்கந்தொனித்தது பங்கயம்பூத்தது
செங்கதிர்பார்த்துரங் குங்கடலார்த்தது

தர்பார்ச் சோல்பல்வி
ஷப்பாற்—பாம்பில் அ
லுப்பாய்த் தூங்கியஸ்ரீ (ரெங்)

தெள்ளியசந்திரன் வெள்ளிமறைந்தண்டங்
கொள்ளிருட்சென்றது பள்ளியெழுந்தருள்

திண்டார் பொன்செல்வங்
கொண்டாய் வுன்செய்கை
கண்டா ரென்சொல்வார்—ஸ்ரீ (ரெங்)

வேணு திகோபிஸ்ரீ காணு தனைவரை
பூணு ழிசேவடி பேணுர் திமாருதி

விம்பா—மேகவு
டம்பா—லோகவ
ரம்பா—ராகவ ஸ்ரீ (ரெங்)

பூம்பருகும்பொன்ப தாம்புயநின்புகழ்
மாம்பழம்சொந்தன்சொல்—லாங்க்ருபைவேல்ச்சாமி

புண்யா—மாபஞ்ச
ஜன்யா—பாவாஞ்சைக்
கண்யா—காஞ்சன ஸ்ரீ (ரெங்)

சர்வத்ராள் தியானம்.

(17) இராகம் பைரவி தாளம் ரூபசம்.

பல்லவி.

ஸ்ரீ அருப்புக்கோட்டைவாழ்—வுளங்க

சிந்துஞ்சி றந்திங்க ணந்தம்சீ மானுறை—ஸ்ரீ (அருப்)

கெணி-திரையலேகடல் குமுறெனநிகர்
நிரைசபைகன தனசாண் ஸ்ரீ (அருப்)

திக்கரவம் வெட்கவேந—டிக்குமயிலுக்கமரு
பக்கமிரு சொற்குமரி—தக்கவனற் பொற்கழல்து
திக்கவருளேக்கொடுமுத்—துக்குமரன் புக்குஸ்ரீ (அருப்)

திடங்க மழ் மலர்கள்வகை பலவிகஜித செழிவனமுறை
தடங்க முனி தனில்வளேதர ளமீனுவத்தி சயமகிழ்மிகு
மடங்க லாப மயில்புனல்கனல் தருகதலிகள் குயில்பறவைகள்
அடங்க ரியபுக ழதுசொல யெவருளரிலே அழகியபதி

அது நிசமென
அது நிசமென
அது நிசமென மொழி விரி ஸ்ரீ (அருப்)

(1) தே—னே—தே—வா—ரா—மா
திருமலரடி குருமணிஸ்ரீ (அருப்)

(2) ஜீனி—போளி—தோசை—மாழை—நேக—பூஜை
தின்குந் தாதங்குளத் தைங்கரனே ஸ்ரீ (அருப்)

(3) செவ்வை—ஒளவை—நௌவை
ஒவ்வை—தெவ்வை—மௌவ்வைச்

செந்திக் கந்தன் றந்தை
அந்திச் சந்தி வந்தஸ்ரீ (அருப்)

(4) சீர்த்தி—நேர்த்தி—பூர்த்தி
ப்ராத்தி சேர்த்தி மூர்த்தி

தினந்தேவரவர்கள் குடியுரைகிறபல
ஜனங்கள்யாவர் முடியரசருள ஸ்ரீ (அருப்)

(5) சிலம்பும் புலம்புங்கதம்பம்
நலன்பும் நிரம்புந் ததும்புஞ்

செல்வியாள் சௌட
வல்லியம்மை மெல்லி ஸ்ரீ (அருப்)

(6) திரிபுடைசைவக மருபுடையேக மிருவடைதாள
தரிகிடமேள முறுபடையாவு மொருகுடையாளி
ஜியார்ஜ்மேரி மாக்ஷிராணி
காக்ஷிப்ரிட்டிஸ் ராஜ்ய ஸ்ரீ (அருப்)
செவியிருகுளி—ரவினயமொடு—கவிசரமழை
குவிசபையிலு—தவிபுரிபைர—விகீதமகிழ் ஸ்ரீ (அருப்)

அநுபல்லவி.

க்ரீட யிந்த்ர னமராபதி நாடும்
கேவலமென்றுமேலே தாவதுங்கை கூடும்
ப்ரீதி திருநல்லூ ரென்பேர்வினை யோடும்
பேரின்பப் பொன்னம்ப லன்றில்லைக்கூத் தாடும்
பிடி பொடி சுடலை யிச்சடலமே
முடிவது சுடனிது வளமையை
நொடி தவிர் தவரிஷி யனைவர்கள்
வடிமது ரிதமல ரடிபணி கிறேன் ஸ்ரீ (அருப்)

சரணம்.

அப்பர் சுந்தரர்நன் மாணிக்கவாசகர்
அருட்பாச்சொல் ராமலிங்கநேகர்—சம
ணப் படையைக்கழு வேற்றுங் க்ருபைதிரு
ஞானசம்பந்தர் சுகர் போகர்
ஒப்பு திருப்புகழென்ற சமுத்திரம்
வோது மருணகிரிநாதர்—மது
ரைப்பதி மூன்றுசங் கத்தார்கள் நக்கீரர்
நலங்கும் பன் தொல்காப்பிய நீதர்

செப்பு வால்மீகி துர்வாசர் கௌதமர்
சிறஞ்சீவி யேழ்வர் சிவவாக்யர்—மாத
வப்ப தியார்விஸ்வா மித்திரர் வசிஷ்டர்
வள்ளுவர் கொங்கணர் வாழ்பாக்யர்
கப்பல் யாபாரங் கடந்த பட்டினத்தார்
கருணைத் தாய்மானவர்கு ணங்குடியார் யின்னும்
அப்படியே பதினெட்டுச் சித்தாதிகள்
அறுபத்துமூவ ரிணங்கடியார்
அற்புதமாய்க்காளி தாஸன் கவிதண்டி
அதிவீரராமன் ஆசுவீரன்—ராமாய
ணப்பு கழ்கம்பன் காளமேகம் புகழேந்தி
நாள் வொட்டக்கூத்தன் காசுதீரன்
சற்ப ரநெல்லைவண்ணத் தண்டபாணிஸ்வாமி
தமிழ்மூகில் சங்கரதாஸ் யூகி—உடும
லைப்ப திசரபமுத்துச் சாமிக்கவிஞர்பன்
நாவல ரெங்கும் சபாஷ்போகி
சுப்ரமண்யக்கிருஷ்ணை தாம்பழகிவாமி
சொல்முத்தமிழ் மன்னன் தேம்பழநிப்பூமி
தற்பர கவிச்சிங்க மாம்பழநாவலர் நேமி
சந்ததிச் செந்தமிழ்ச் சரமணி வேல்ச்சாமி
தார்விந்தை யாமிதே ராஜ எம். ஆர். க்
கோவிந்தசாமியே போஜசெம்மால்
பூவின் தயாமுரு கேசபெம்மான்
மாவிந்தமாகிய நேசர்கும்மால்த்
தடவரை வுருகிடு ஞானியெம்
உடனுதவிடு மரு மோனியம்
திடமின்கீதப ஜனைக்கம்பேனியும்
நடனமகிமை தனசன்மான்ய ஸ்ரீ (அருப்)

முருகதம்பிரான் பஜநாமிர்தம்

அத்யந்தப் பிரார்த்தனை.

உற்றார்விரதங்கொள்ளேனென்ற—சிங்கார வர்ணமெட்டு.

18 இராகம்-இங்லீஷ்கிளாரநட்—தாளம்-ரூபகம்.

பல்லவி

வேலு மயிலுந் துணை வடிவ
வேலு மயிலுந் துணை வடிவ
வேலு மயிலுந் துணை. (வே)

அனுபல்லவி

(சர்ச்சம)—ச—ஜ

விஞ்சை விஞ்சை விஞ்சை
வினவிய கன தனசிவனிரு செவிபுகமலை
தனில் மொழிதரு—பானவன்—றரி அழகியவடி (வே)

சரணம்.

(பஞ்சம)—ப ஏ

நெஞ்சை—நெஞ்சை—நெஞ்சை
நினையெனவனு—தினமதி சொலி—யென தாடல் ஜென
னமரண பிணி—விலகிடுமெள டதமருள்வடி (வே)

(மத்திப)—ச.

குஞ்சைக் குஞ்சைக் குஞ்சைக்
கொணைகிறகோழி—யடைமர்கரு—உருவுயிரொடு
இனையளவிரை—கொடுவளர்—துணைதிகழருள்வடி (வே)

வடி—வேலுமயிலுந்துணை—வடி.
வேலுமயிலுந்துணை—வடி
வேலுமயிலுந்துணை

விம்பந்தங்குஞ் சரவண
பம்பஞ்சங்கம் பிரணவ
கும்பந்தங்கங் குறவர்க
ரும்பின்பங்கன் றிருவருள்

வேறின்பம்—யேதின்பம்—பேரின்பமே (வே)

சரணம்.

மஞ்ஞைச்சாரதிமுன்உன் மாமன்றாணில்
மறைவிலே நரஹரி உருவொடு

ஞ்ஞஞ்ஞென் றிரணியன் குடல் நன்மார்பூணி
நதிரெப்பிணை நெறியால்
உதிரக்குடி வெறியாய்
ஞான்றேவி மோக்ஷணம்
சான்றேவான் தீக்ஷண்யம்

நவில் சரபசொரூப சூடாமணி (வே)

சனகங்கண சுபமங்கள சுபஷண்முகனே.
மனசங்கட வினையுந்தவிர்-சரணங்குகனே.

கடுபாம்பணி நடிசம்புவர் கனிவேண்டுவனே
பொடிசாம்பல்பெண்வடிவம்வெய்ய-முனியாண்டவனே

கந்தப்பா புவிச்சங்கம் பூம்பத தெரிச னநேமீ
சந்தப்பா கவிச்சிங்கம் மாம்பழமர பினன் வேல்ச்சாமீ
திருக் கருணைமுகிலே குமரவிஜய (வே)

குமரக்கடவுள் நாமாவளி



(19) புதிய பார்ஸி நோட்.

---

(1) சேவலாளி தேவராஜன் சேவைசெய்வ சீகரா
தெய்வானையின்ம னோகரா
திராவிடா தயாகரா
ஜீவகோடியாதரா—கு—சேலர் க்ஷேம சீதராம்
ஸ்ரீனிவாச மருக முருக தெய்வமே
அரோகரா (சே)

(2) சோட சோப சார பூஜை சூடதீப சேகரா
சுலோகமந்த்ர நாகரா—சற்
தொண்டரின்க்ரு பாகரா
வேடராணி மோகனா—கூர்—வேல்மயூரவாகனா
வீரபாகு மந்த்ரிசூழ் விநோதனே
அரோகரா (சே)

(3) மாக்ஷி போஜகாளிதாஸ்—மனோன்மணி சுதாகரா
மகான்களின்ப சாகரா
வரோதயாப டீகரா
சாக்ஷி சேர் விபூதி சந் தான க்ஷேம க்யாதி தந்
தடம்பொன் உடம்பன் திடம்முன் இடும்பன்
கடம்பனுக் கரோகரா (சே)

(4) சகலபுலவர் கப்பங்கட்டும்-சக்ரவர்த்தி மாம்பழம்
வேல்ச் சாமிதெரிசனம்பழம்
ஜனனுகூலப் பூம்பதம்
சிகர ப்பழநிப் போகரா—சு—தேசிகா திவாகரா
செஞ்சிலம்பின் குஞ்சிதப்பொன்
சேவடிக்-கரோகரா (சே)

திலங்காகாபேகிஎன்ற ஹிந்துஸ்தான் வர்னமெட்டு.
20—இராகம்—அமீர்க்கல்யாணி தாளம்—சாப்

---

(1) கார்த்திகா நித்ய கல்யாணா
கந்தவேள் சத்ய சொல்ஞானா
கீர்த்திகா அத்ய ந்தர்வாணா
கெஞ்சினான்பூஜித்த தும்வீணா (கா)

(2) ஆறுமா ஆன னத்தானே
அண்டினேன் நானு னத்தானே

கூறுமா சிவாம ணித்தேனே
கோழியின் கேத னத்தானே கா

(3) கண்கண்ட தெய்வம் நீயாச்சே
கங்குல்முன் ஜோதி யுண்டாச்சே
பெண்கொண்ட வாழ்வு பொய்ப்பேச்சே
பிள்ளையைத் தள்ளா தேயேச்சே கா

(4) தாயவள் ஹூமை பெற்றாலும்
சந்துஷ்டிப் பால்தந் தாற்போலும்
சேயன்மேல் நீமை யுற்றாலும்
சீர்தூக்கி யாள்வை மென்மேலும் கா

(5) ராஜா ஜேஸ்ப ரிபாலா
ராணிகுஞ் சரிவள் ளிலோலா
ஈசபோ தாகச்சி யால்மூலா
யிலக்கணந் தந்த கூர்வேலா கா

(6) காம்பரி சற்புத் ரபூமா
கல்வியின் பொக்கி ஷச்ஸ்ரீமான்
மாம்பழம் கொர்ச்சனைக் கோமான்
வரதவேல்ச் சாமி சொற்க்ஷேமா கா

கபரிநகி என்ற ஹிந்துஸ்தான் வர்னமெட்டு.

21 இராகம்-ப்யாகு—தாளம்-ஆதி

பல்லவி

காருண்யனே—அருட்

கர்த்தா—சுப்ரமண்யனே
காருண்யனே—சரண். கர்

அநுபல்லவி

காருண்யனே—துணை
வாரும்புண்யனே—அருட் கர்

சரணம்

விர்த்தாந்த மாய்முன்கூதாய்
விஞ்சை விமலபோதா
சித்தா பொதிகைமுனி
தியானு தேவிசமேதா கர்

தொகையறா

கடவுளேகுமரா—கழுகாசலேசா கருணாநிதியே
அறுமாமுகப்பெருமானே — என்

உடல்பொருளாவிதன் தாய்தந்தைதலைமுறையாவரும்
உனக்கபயமபயமே முருகோனே

திடமருட் தமிழ்ச்சக்ரவர்த்தி மாம்பழக்கவிச்
சிங்கக்குலாதிபன் வேல்ச்சாமி

செல்வர்க்குதவிமா மயிலேறிவருவோனே
காருண்யனே சரண். கர்

மாயா விநோதத்தின் என்ற வர்னமெட்டு.
(22) இராகம்—ப்யாகு—அடை தாளம்

(1) தேவாதிதேவா ஜெயா. வல்லவா
சிஷ்யன்வேல்ச்சாமி சொல் தேனல்லவா
பாவவிமோக்ஷணப்பயன்சொல்லவா—நின்
பக்தரில் நாளுெரு வனல்லவா. தே

(2) சாமிவந் தாள்வாய் தயாநிதியே
தனையனைக்காக்கத் தகுந்ததியே
பூமிதனிலேநீ யேகெதியே—உன்
போற்றெய்வங் காணேன்சேனுபதியே தே

(3) கந்தாரிவாழ் வேடக்கன்னிதினைக்
காவினிற்சேரக் கவுழ்ந்தாய்சுனை
சந்தாதியென் றெண்டுதாயார்மனை
தன்ம்பங்கில்வைத் தாய்சமாராதனை தே

(4) அந்தம்பல வாகமம்பேசுது
அனங்கன்செய் கின்றவலைவீசுது
வந்தம்பொருந் துன்வரம்பூசுது
மற்றேரைத்துதிக்கநா வுங்கூசுது. தே

ஆத்திமேரே டிங்கிசையாங் என்றஹிந்துஸ்தான்மெட்டு.
23 இராகம்—தேசிகதோடி தாளம்—யேகம்.

(1) காக்ஷியாய் விளங்கும்—கந்தா காக்ஷி

கண்குளிரத்தெரிச—னந்தா
விண்குலிச வேந்தன்—சிந்தா வேலனே. காக்ஷி

(தொகையரு)

(2) சாக்ஷிசெரு—சேவற்கையா
தாண்டவம யூரத்துய்யா.

(பாட்டு)

மாக்ஷி தானே—வந்தனே செய்யா
வஞ்சனிருந்துமி—றந்தென்ன மெய்யா காக்ஷி

(தொகையரா)

(3) துரையேசா—வேறி
சடலே ரூப ராகி

(பாட்டு)

பிறையார்விஞ்சைப்—போதகுரு
பீடமான கூட தீபக் காக்ஷி

(தொகையரு)

(4) துஜனசு—தீக்ஷணு
துன்பம்வி—மோக்ஷணு

(பாட்டு)

பஜனரம்ணத்—தேவசேனு
பதியருள்பர—கெதிவிமானக் காக்ஷி

(தொகையறு)

(5) ராஜேந்த்ர—மாம்பழம்
ஞானேந்த்ரப்—பூம்பதம்

(பாட்டு)

தேஜசுகுண—வேல்ச்சாமி
தீக்ஷ்தக டாக்ஷபூமிக் காக்ஷி

விமலக் கமல மோகனஜானி என்ற வர்னமெட்டு.

(24) இராகம் பார்ஸி மோகனம் தாளம் யேகம்

1 அமர குமர சமர சாசெய்
ஆ சீர் வா தம்
அடிமையெனது வறுமையிடர்கண்
டாள் வீர் நீ தம் அ

2 கமரிமான் மகள் மோகனனே
கலாபமாமயில் வாகனனே
கனதனனே
இனஜனனே
தின கர புவி திலகமான அ

3 மங்கையர்க்கரசி மதுரைராணி
மங்களபாலதண் டாயுதபாணி
வரதசுகா
விரதகுகா
மீனாக்ஷி சாக்ஷி காக்ஷியுடைய அ

4 அம்பொன்வடவரைப் பன்னிருதோளா
ஆறுமுகமுடி மின்னுந்தயாளா
ஆரணனே
காரணனே
அண்டருந்தொண்டருந் தெண்டனப்பாத அ

5 பஞ்சபூதங்களை யொன்றுபடுத்தி
பக்திபழுத்தவர்க் கன்றல்லோமுத்தி
பாக்ய சித்தி
வாக்ய விர்த்தி
பருக முருக வருக வருக அ

6 உத்தமமாம்ப ழத்தின் தியான
முத்தமிழ்ஞான ரத்தினமான
ஊர்ஜிதமாய்
வேல்ச்சாமியின்
உணர்வருள்சர வணதடாக அ

(புதுமைச்சிந்து)

25 இராகம் தேசிக மாந்த தாளம் யேகம்

1 செந்தா ளம்பூ வுந்தே னுங்கமழ்
திருக்கழுக் குன் றாரனே செங்
வந்தாடுங் காவடியோர்
வணங்கும்பொற் சேவடியோர்
வரக்கண் றந்தையே

குரக்குழந்தையைப்
புறக்குங்கந்தவேள்
சிறக்குஞ் சந்ததஞ் செங்

2 கந்தா சிந்தா னந்தா செந்தூர்க்
கடம்பனே கட லோரனே கந்
சிந்தாமணி விளக்கே
திருப்புகழுஞ் சிந்துமுழக்கே
தெம்புட னாடுவோம்
கும்பிடு போடுவோம்
நம்படி தேடுவோம்
டம்பமாய்ப் பாடுவோம். செங்

3 அன்றும் பெம்பாற் கும்பா பிஷேக
அமரனே முத்துக் குமரனே அன்
கண்டாமணி யோசையுங்
கண்டேன்திருப் பணிபூஜையும்
காம்பரி தந்தருள்
மாம்பழம் சந்ததி
தேன்மொழி வேல்ச்சாமி
தாம்புகழ்ச் செந்தமிழ் செங்

பஹாரியாலா தேக்கோ என்ற வர்னமெட்டு

(26) இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் யேகம்

குமார சாமி வித்வக்
கோஷ்டிசெய் நேமி. குமார

1 விமானநீல மாமயூர மேலிலங்குஞ்க்ஷேமி
சமானமில்லா தெய்வமே சரூர்பூமி
கந்த சஷ்டிநாமி
ப்ர்ம்ம சிஷ்டிவாமி
குகைக்குள் வெண்குடம்
புகைக்கும் சங்கப்ப
லகைக்க விளர்அம்
பிகைக்கு மின்ப குமார

2 காவி வஸ்த்ரமேவிச் சித்ரக்
கைவேலாபோரூரா திருக்
கருணைத் திருநீர்கருணா மருளுங்கனதீரா
பிர காசத்தேரா
மேற்கு வாசற்காரா
கழனிச் சோபித
பழநிக் காவில்முன்
இளநீர்க் காவடி
வளமைத் தேவ குமார

3 மேழிவாழிமாம்பழக் கவிச்சிங்கவிலாஸன் தமிழ்
வீர விஜய வேல்ச்சாமிகல் விப்ரகாசன்
துதி மேற்சந்தோஷன்
கலி தீர்க்குந்தேஜன்
விந்தைக்கும் பக்தர்சி
றந்தைக்ய முத்திதன்
தந்தைக்குங் கர்த்தனென்
சிந்தைக்கு முத்துக் குமார

கல்யாணம் செய்துவையுமே என்ற சிங்கார வர்ணமெட்டு.

27 இராகம் பார்ஸி நாட்டை தாளம் ஆதி

பல்லவி

நெஞ்சே சம் சாரம் நிலையா குகன்
நெறிமுறை மலையா நெஞ்

கண்ணிகள்.

1 அஞ்சேல்யினியெமன் அனங்கனுந்தீண்டான்
அவனிபெண்ணாசைவே ரால்நியும்வேண்டாம்
செஞ்சேவ லாளி திருத்தணி யாண்டார்
ஜெயந்தருமனுக்ரகச்சேவடி பூண்டால் நெஞ்

2 தழுகை முக்யபூஜை சமஸ்க்ருதமோதும்
சரவணக்குணமணி சரணமறவாது
தொழுதவர்க்கு ஒரு பழுது வராது
சுழிமுனை வழியிதென் மொழி பிசகாது நெ

3 பிடத்தங்கமனத்தார்க்குப் [illegible] கரும்பினிக்கும்
பேரின்ப பட்டினத்தார் [illegible] ஜெனிக்கும்
திடத்தருணகிரியின் திருப்புகழ்த் தொனிக்கும்
தெரிசனக்காக்ஷிபோற் சிறஞ்சீவியெத்தனிக்கும்

4. திருச்செயற்கறுங்கல் தேர்சிலை பாணம்
செம்பொன்னைக்கண்டா[illegible] நித்தப்ரமாணன்
அரிச்சந்த்ரா பஃதார்க் களித்துக்கல்யாணம்
அருள்பரை கனசுத முருக பஜனப்ராண

5 முத்தமிழிடிமின்னல் முழங்கிடுமேகம்
முப்புவிபுகழ்மாம் பழங்குல யோகன்

சித்திரவேல்ச்சாமி செஞ்சொற்ப்ர வாகன்
திருப்பரங் கிரிக்குகை இருப்போன்றாணைவிவேக

அய்யாபழனிமலை வேலா என்ற மெட்டு பின் மகுடம்.

28 இராகம்—சகாணு—தாளம்ஆதி.

(1) பத்ராயு—குமரவை போகா திருப்
பரஙகிரிக்—கருணை விசாகாச்ரண
சித்ரா பௌர்ணை மதிச்சேகா—தே
சிககலியுகவர தாகா—தவச்
செல்வமுங் கல்வியும் க்ஷேம
நல்வரஞ் சொல்வரும் நேமப் (பத்ரா)

(2) கல்லாவுன் மனங்கறை யாதா—தேன்
கசிசத தளமலர்ப்பாதா—வுல
கெல்லாமுன் திருச்செயல்நாதா—எனக்
கிரங்கிவரந்தர் தாலாகாதா—பே
ரின்பனே கொம்பன் தம்பிசி
தம்பர நண்பர்வ ரம்பின் (பத்ரா)

(3) முன்னாட் பொதிகை மலை முனிக்கும்—குரு
மூர்த்திவுன் பிரணவம் ஜெனிக்கும்—நிதம்
சொன்னால்வுன் சந்தஞ் சிந்துமினிக்கும்—வலஞ்
சுழிப்புவி வந்தனை தீங்கணிக்கும்—புகழ்
சொற்பிரபல்ய சுப்பிரமண்ய
அற்புத துல்ய கற்பகபுண்ய (பத்ரா)

(4) கற்பூரப்ரகாசக்- காக்ஷி புனு
காப்புத்தெரிசனமே- மாக்ஷி— செம்
பொற்பாதப் பூஜையிலா- லாக்ஷி— மணிப்
புகழ் தொனிக்கருணைக்க- டாக்ஷி—தமிழ்ப்
பொக்கிஷ நிஷ் காமிமாம்ப
மூக்குல வேல்ச்சாமி—நம்பும் (பத்)

---

29 பாலரே உம்மிட தாயாருடன் என்ற மெட்டு.

இராகம்—பியாகு—தாளம்—ரூபகம்.

(1) வாகாவா வென்றாலுந்—தேவா நீ வாராதுன்
வம்சக்குறிப்பல்லவா.
ஆகா வுன் தமயன்—அன்னை தந்தை மாமன்
ஆதிக்கத்தைச் சொல்லவா
நல்லவா ஆதிக்கத்தைச்சொல்லவா
வல்லவா ஆதிக்கத்தைச் சொல்லவா

(2) யானைமுகம் பெரும்—பானை வயிருய்வுன்
அண்ணனிருப்பதென்ன
பூனையின்குட்டியும்—மானின் றன் குட்டியைப்
புணர்ந்தாயே கேலி சொன்னல்.
அன்னட் புணர்ந்தாயே கேலி சொன்னல்
மன்ன புணர்ந்தாயே கேலிசொன்னல்

(3) தாயும் சபைதனிற் பேய்போலே நின்றுமுன்
தாண்டவ மாடலாமா—அவள்

சேயிளை யென்றுமே யோக்கிய மோவுன்மேற்
செந்தமிழ்ப் பாடலாமா
நாடலாமா செந்தமிழ்ப் பாடலாமா
தேடலாமா செந்தமிழ்ப் பாடலாமா

(4) வந்தியின் பிட்டைவுன் தந்தை வாங்கிவுண்டு
மண்மேற்படுக்கலாமா.
உந்திக்கோபமன்னன் வந்தடிக்கப்பயந்
தோட்டமெடுக்கலாமா,
ஞாயமா வோட்டமெடுக்கலாமா
மாயமாய் வோட்டமெடுக்கலாமா

(5) தாடகை வாலிம ராபுனல் ராவணன்
றன்னை மாமன் கொன்றானே—போ
ராட இந்த்ரசித்து பொய்ச்சீதை வெட்டப்பார்த்
தழுது நின்றனனே.
அன்று நேர் அழுது நின்றனனே
நன்றன்னே அழுது நின்றனனே

(6) செம்பழநித் திரு-விழாக் கொட் டோசையாற்
செவி செவிடாச்சே.
மாம்பழக்குலன் வேல்ச் சாமிசொன்னதாலுன்
மானம் பறிபோச்சே.
அறிதாச்சே மானம்பறிபோச்சே
வெரிதேச்சே மானம்பறிபோச்சே (வா)

ஓமஷ்த்ஸா ஆத்தனரிலோவாரி என்ற
இந்துஸ்தான் மெட்டு
30 இராகம்—தேசிகதோடி—தாளம்—ரூபகம்.

அரோகராஞான சம்பந்தாகுழ ந்தாய்
யேனழுகிறாய் குழந்தாய்
தீனிவகை வேணுமென்றால்
நானுடனே தாரேன் (அரோ)

ரா ரா ரோ ராரி ரரோ
ரா ரா ரோ கூறுயோ (ஞா)

அரோகரா காளிஉண்டதேனுந் தீனே
மாவின்வகை வேணுமென்றால்
நானுடனே தாரேன்

அல்லாது ஜீனிவடை தோசையும் பஞ்
சாமிர்தமும் வேணுமென்றால்
நானுடனே தாரேன்

அல்லாதுன் சேவடியிற் தூவுமலர்க்
காவடிப்பால் வேணுமென்றால்
நானுடனே தாரேன்

சிலாசொல் பாலாசொல் வேலாசொல்
வித்வசிரோன்மணி மாம்பழம் வேணுமா
வேல்ச்சாமிபணி தீம்பதம் வேணுமா (ஞா)

அகர இஸ்கர்மேஜிகனி என்ற இந்துஸ்தானி மெட்டு.

31 இராகம்—தேசிகமால்கோஸ்—தாளம்—சாப்.

பழநி நாதன் வாத்ய மேசே கண்டிசங்கே
சேகண்டிசங்கே, சங்கே, சங்கே, சேகண்டிசங்கே.

பந்தபாசமே மாத்து தேசேகண்டி சங்கே
சேகண்டி சங்கே, சங்கே, சங்கே, சேகண்டிசங்கே.

பாடுந்துதியசாத்யமே சேகண்டி சங்கே
சேகண்டி சங்கே, சங்கே, சங்கே, சேகண்டி சங்கே

(தொகையறு)

பாலாபிஷேகன்
நாலாவிவேகன்
நீலாமயூரன்
வேலார் குமாரன்

பாம்பழநிநேயி மாம்பழ வேல்ச்சாமி
பாமசற்குரு பிரணவப்பொருள்
கிரமமெய்த்திரு வரமளித்த பழ

அம்பாள்மதுரைமீனாக்ஷி என்றவர்ணமெட்டில்
பின்மகுடம்

32 இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி

(கண்ணிகள்)

1 சாமிநாதா வந்தருள் முருகோனே நெடு
நாளாக நம்பியிருந்தேனே சா

நஞ்சையுண்ட ஈசனுக்கு
விஞ்சைமந்திரம் புகன்றகோனே
திரம் புகன்ற கோனே
திரம் புகன்ற கோனே
திரம் புகன்ற கோனே

2 ஆதாரம் வேறுமறியேனே யேழை
ஆனுமுந்தனடியேனே எனக் காதார்
யானை முகனுக்கிளைய
ஞான சற்குருவென வந்தோனே
குருவென வந்தோனே
குருவென வந்தோனே
குருவென வந்தோனே

3 வள்ளிக்கிசைந்திடு மொய்யாரா என்மேல்
வாது செய்யாமலருள் தாராய் குற (வள்)
வரையைப்பிளந்த ஜெயத்
துரையே மகத்வகன தீரா
மகத்வ கன தீரா
மகத்வ கன தீரா
மகத்வ கன தீரா

4 தெள்ளிக்கலாபமயிலேறாய் என்
சிந்தாகுலந்தவிர்க்கவாராய் செழுந்தெள்
திருச்செவியும் செவிடுமுண்டோ
புவியை வலமாய் வந்தவீரா
வலமாய் வந்த வீரா
வலமாய் வந்த வீரா
வலமாய் வந்த வீரா

5 சிவ காமியீன்றெடுத்த பாலா மனங்
கல்லோயிரும்போவடிவேலா சிவ காமி
கவ்வையோ யெந்தனின் முறை
ஔவையை யேய்த்தகுண சீலா
யேய்த்த குண சீலா
யேய்த்த குண சீலா
யேய்த்த குண சீலா

6 தாமிதமேனுமுரைகேளாய் வேல்ச்
சாமிதமிழுனி தயாளா இன்னுந் தா
மதமே மாம்பழக் கவிச்
சிங்கமே புகழுமலர்தாளா
புகழு மலர்த் தாளா
புகழு மலர்த் தாளா
புகழு மலர்த் தாளா

ராமபஜன ஹோ தியாம் என்ற வர்ணமெட்டு

33 இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி

பல்லவி

1 ஞான பழநி ப்ரபாகராரமணாகரா ஞான

கண்ணம்.

2 தினநின் தெரிசனம் ஜென்மவிமோக்ஷணம்
சிறியேன் தினசாசனம் ரமணாகரா ஞான

3 திடமருள்நாதனே திவ்யசங்கீதனே
நடனமயில் விநோதனே ரமணுகரா ஞான

4 மவுனக்ருபாகரா வள்ளிமனோகரா
பவண கருணுசாகரா ரமணுகரா ஞான

5 மதாஸ்யமாம்பழநேமி மகிழ்மணிவேல்சாமி
சதாபுகழ்நிஷ்காமி ரமணுகரா ஞான

விகஜிதபுட்ப என்ற சிங்காரவர்னமெட்டு

34 இராகம்—தேசிகமாங்கு—தாளம்—ஆதி

சந்தச்சார்பு

1 விதாண ரத்னவி நோதவேலா
விஜயனே பக்தஜ ஞனுகூலா

மிடர்விட சிவசெவி மடல்மொழிரகசிய
மிருபிர ணவவிபரீத சீலா

விந்தை தொந்த தந்தை யன்னை
விந்து வொன்ற மைந்து மைந்தன்

விதிபிறந்து மதிவளர்ந்து
கிதிமறந்து கதிசிறந்தோர் வி

2 மலரடியைத்தொழ வாஞ்சைதந்தாய்
மயிலே நடத்திவ ராதிருந்தால்

மருவிடு கலிபிணி இருவினை விடாற
வரமருள் புரிவதெ வ்வாது கந்தா

மக்கள் தொந்த ரிப்புறு ந்தாய்
துக்கமென்ற லுப்ப துண்டா

மகபதியுஞ் ஜெகபதியும்
புகழ்துதிசெய் பகவதிசேய் வி

3 வழிய நரஸ்துதி பாடி லோப
மடையர் மனைப்படி நாடி லாப

மதுபெற யிசைபொருள் விதிபோடுபுகலினும்
மகிழ்வொருகர் சுகொ டாத கோபம்

வஞ்சனென்று வெம்பி நின்று
நெஞ்செரிந்த ரம்புகன்று

வம்பிலவர் ஐம்புலனும்
நொம்பலமா கும்புலவோர் வி

4 பரவச முத்தமிழேந்த்ர ஸ்ரீமாம்
பழமரபிற்புகழோங்கு க்ஷேமா

ப்வரிஷ விமரிசை நவரஸ சமரச
பரிமள பாஷ்ய வேல்ச் சாமி நேமா

பக்ஷ ப்ரத்தியக்ஷ சித்தி
லக்ஷ ணச்சாயுக்ஷ முத்தி

பார்த்துளமே பூத்துடனே
காய்த்தகனி பூர்த்தியருள் வி

---

35 ஆதிவுதாரியாரு என்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி தாளம்—ரூபகம்

பல்லவி

மால் மருகா என்மீது
வேல்முருகா யென்மீது மால்

அனுபல்லவி

வாதேன் தகா இப்போது மால்

சரணம்

1 வானவர் பணியுங்கோ வே
ஞானக்கண் தரும் கர்த்தா வே
யானையுரித்தோன் குரு வே
மோனதெய்வமே திரு வே
ஆதரித்தாளவடிவேல்முரு கா என்மீது மால்

2 பொங்கு கடற்கரை வேவும்
மங்களக்கல் யாணனே
சங்கரி பாலகனே
தங்கசெங் கோற்குகனே
தாமதமேனு வடிவேல்முருகாயென்மீது மா

தேனுந்தினைமாவு முன்னே
தின்றகளைப் போசெம் பொன்னே

வானுலகத்தோர் துதிக்கும்
மாமயூரமேல் நடிக்கும்
வள்ளிமணாளா வடிவேல்முருகா என்மீது மா

4 வாரணகேதனமிஷ் காமி
மாம்பழஞ்சொந்தன்வேல்ச் சாமி
காரணப்புனுகாபி ஷேகா
பூரணங்கழுகாச லேகா
கருணைவிசாகா வடிவேல்முருகா என்மீது மா

தர்மசங்கடம் என்ற வர்ண மெட்டு

36 இராகம்—அமீர்க்கல்யாணி—தாளம்ஆதி

கருணைக்கண்மணி உனக்
கர்ச்சனம் பஜனம்
பச்சைமாயில் (கருணை)

அருணை கிரியார் புகழ்
ஆட்கொண் டேற்கும்
தாட்கொண் டார்க்குங் கருணை

சிலைபார்மலையே சுமந்
தேவரும் வம்பன்
சேவையிடும்பன் கருணை

வசமான் யெஜமான் மகள்
மாப்பிள்ளையாய்புல்
மேற்பள்ளி மால்மகிழ் கருணை

சமரா குமாரா வந்
தருள்புரி குகத்தவப்
பொருள்சொரி முகில்சிவ கருணை

மதுமாம்பழமே குல
மாணிக்கமணி வேல்ச்
சாமிக்கை பணிவேன் கருணை

37 மாஸ்ஸாதேக்தே என்ற இந்துஸ்தான் மெட்டு

1 பார்காவடியபிஷேகா கிரு
பாபரங்கிரிப்யோகா துணை
பாதசம்ரமவாகா அத்
வீதஇன்பவிசாகா அருட் பார்

2 வேற்காரணவீரா சஷ்டி
விரதர குணதீரா பகை
மூற்கா ரெணபோரா வள்ளி
மோகனுமணக்காரா அருட் பார்

3 பஞ்சாக்ஷரபாக்யா — ஆடும்
பரிசேகர சிராக்யா — என்
நெஞ்சாச்ரமவியாக்யா — ஜதிரி
நேத்ரன் ரகசியவாக்யா — அருட் பாற்

4 தெண்டாயுதபூமி — ஸ்ரீல
ஸ்ரீ மாம்பழநேமி — தொழும்
பண்டாரவிஷ்காமி — தமிழ்
பஜனத்யான வேல்ச்சாமி — அருள் பாற்

முத்துக்குமரையனே என்ற கீர்த்தன வர்னமெட்டு

38 இராகம்—சங்கராபரணம்—தாளம்—ஆதி

பல்லவி.

பக்திப்பரங் குன்றோனே — பக்தி

அநுபல்லவி.

தித்தித்திடுஞ் செந்தேனே — பக்தி

சரணம்.

1 அஸ்திதோல் நரம்பு ஸக்தி மாங்ஸ்முதி
ரத்திலெந்தன்ஜென்மம் அதிலென்பிர

வர்த்திமாயைகர்மம் அடிமையைச்
சொஸ்திசெய்தல்தர்மம் ஞான பக்தி

2 நெஞ்சம்நின்றுனடி தஞ்சமென்றுதுதி
கொஞ்சமன்றுதொண்டன் சேய்க்கறி
நஞ்சமுண்டகண்டன் வாய்க்குரு
விஞ்சையின் ப்ரசண்டன் ஞான பக்தி

3 செட்டியார்மகனும்ரெட்டியார்பகரும்
கெட்டிசிந்து சந்தம் காவடி
கட்டிவந்தனந்தம் சேவடித்
திருஷ்டிதந்தகந்தன் ஞான பக்தி

4 சங்கடங்கவலை யுங்கடந்ததிரு
வெங்கடன்றன்மருகா விஜயஜெயப்
பொன்கடம்பமுருகா யிசையபஜ
னங்கடங்கியருள் கார்த்திகேயா பக்தி

5 சாம்பிணங்களுயிராம் பரம்பொருளே
வேம்பனம்பூமி தமிழ்மதுர
மாம்பழம்சொல்நேமி அமிர்தமொழி
யாம்புகழ்வேல்ச்சாமி ஞான பக்தி

39 இராகம்—தோடி—தாளம்—ரூபகம்

பாலராமணேயனே என்ற ராமாயணவர்னமெட்டு

பல்லவி

போகர்மலைத் தெய்வமே மனப்
பூர்த்திரை வேத்தியப் பிரார்த்தனைச் சைவமே(போக)

கண்ணிகள்.

சாகரமெஞ்ஞானச் சரவண மூர்த்தி
ஷண்முகமாமணி யுண்மைசொற்பூர்த்தி
ராகப்ரியாசற்கு ஞகர நேர்த்தி
நம்புந்தொண்டன்சேவித் தின்பங்கொண்டேன்கீர்த்தி

2 காலப்பிரஸ் தாபமே நெஞ்சைக்
காணிக்கைவைத்தேனே மாணிக்கத்தீபமே கா
ஆலயப்பரங்கிரி அதிசயந்தேடி

அற்புதசிந்துதி ருப்புகழ்பாடி
சீலப்பதாம்புயம் சிரசினிற்சூடி
ஜெயம் ஜெயமென்றன்பர் திருநீர் முன்கொண்டாடி

3 யேழைபங் காளநன்றோ குறை
யேதென்றுன் மயில்மேல்வாராததும்நன்றோ
வாழையடிவாழை மகிமைவைபோகா
வள்ளிதெய்வானைக்கு வாய்தநேகா
யாழைக்யானவாணி யாளன்விவேகா
அரும்பொருள் வேதாந்தக் கரும்பே விசாகாநல்

4 வாழித்திருச் சோபனா தமிழ்
மாம்பழம்வேல்ச்சாமி வரதவிக்ஞாபனா வாழி
ஆழியெண்மலைகள் தட் டலைந்துபோனாலும்
ஆதவனிந்துந் தெற்காயுதித் தாலும்
ஊழிப்பிரளயம் உலகம் பிரண்டாலும்
உன்னடியா ரழியாரேவொ ருக்காலும் போ

மங்கள் வாழ்த்து.



ஸ்ரீ ராம ரூப முலகு என்ற வர்ண மெட்டு

இராகம்—சக்ரபாகம்—தாளம்—ஆதி

(பல்லவி)

கீதா கெம்பீர முருகன்
கீர்த்யம் ரமண மங்களம் கீதா

(அனுபல்லவி)

ஆதார வேலுமயிலோன்
ஆச்சார விபூதியருள்சம் கீதா

(சரணம்)

வாத்யா கல்யாண வள்ளி
மாதா தெய்வீக குஞ்சரி கீதா

ஸ்ரீமான்செங் தேன்கடம்பன்
பாமாலைமாம் பழனிவேல்ச்சாமி கீதா

சுபமங்களம்.

வாழ்த்துச் செய்யுள்.



கர்த்தன்மணி முடியாறு முகங்களிரு
சட்புஜம்பூங் கழற்சீர் வாழி
நர்த்தனமயி லயில்சேவற் கொடிகடம்பும்
யானைவள்ளி நாதன் வாழி
உத்தமசி தம்பரமால் யேஜண்டு
கிருஷ்ண பிள்ளைவுஜித புக்ஷாப்
வர்த்தகமும் சரஸ்வதிமால் மாம்பழவேல்ச்
சாமிதமிழ் மடல் வாழ்கவே.

—இந்தப் புஸ்தகம் 1–2–வது பாரம்
பிரஸிலும், 3–4–வது
விலாஸம்

